# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, சனவரி மாதம் 01 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. கூட். 27/2008*

**கிராஸ்ரூட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*"கிராஸ்ரூட்ஸ் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவது மான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கை யில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட கழகம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல் வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காக இருக்கு மாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

*1.* இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*கிராஸ்ரூட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

*2.* இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கிராஸ்ரூட்ஸ் மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகை யோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத் தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கிராஸ்ரூட்ஸ் மன்றம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்.

அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன் படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத் துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) மதம், இனம், சாதி, குலம், நிறம் மற்றும் சமுக அந்தஸ்து என்பவற்றைப் பொருட்படுத்தாமல் தனித்தனியாகவும் கூட்டாகவும் மக்களது குடியியல் உரிமைகளையும், குடியியல் சுதந்திரத்தையும், மகத்துவத்தையும் பாதுகாத்தல்.

(ஆ) வறியவர்களுக்கும் கீழ் மட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கும் குடியியல் உரிமை, அடிப்படைக் கடமைகள் மற்றும் இலங்கைப் பிரசைகளின் உரித்துடைமைகள் பற்றி கல்வி புகட்டுதல் ;

(இ) பல்வேறு தேர்ச்சித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதன் மூலமும் தொழில் வாய்ப்பை குறிக்கோளாகக் கொண்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதன் மூலமும் வறியவர் களினதும் கீழ்மட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்களின தும் பொருளாதார அபிவிருத்தியையும் சமுக உயர்ச்சியையும் ஊக்குவித்தல் ;

(ஈ) பல்வேறு கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களையும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்வதன்மூலம் எல்லா இனங்களையும் மதங்க ளையும் சேர்ந்த மக்களிடையே சமாதானத்தையும், சமுக நீதியையும் இன சமத்துவத்தையும் மத ஒற்றுமையையும் பரஸ்பர நம்பிக்கையையும் மதிப் பளித்தலையும் ஊக்குவித்தல் ;

(உ) தங்களது தாய்மொழியையும் பண்பாட்டு விழுமியங் களையும் நல்ல மரபுகளையும் பாரம்பரியங்களை யும் பேணிக்காக்குமாறு மக்களை ஊக்குவித்தல் ;

(ஊ) கணனிகளிலும் கணனித் தொழினுட்பவியலிலும் ஏனைய பல்வேறு தகவல் தொழினுட்பவியலிலும் நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்வதன் மூலம் நகர மற்றும் கிராமிய வறியவர்களின் தகவலுக்கான உரிமையை ஊக்குவித்தல் ;

(எ) வறியவர்களினதும் வசதி குறைந்தவர்களினதும் தொடர்பாடல் திறமைகளையும் தொழினுட்பவியல் திறமைகளையும் உயர்த்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்தல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள், மத குழுமங்கள், கலாசாரக் குழுக்கள், சர்வதேச ஒழுங்கமைப்புகள், வேறு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புகள் என்பவற்றுடன் நெருக்கமான தொடர்புகொண்டு பணியாற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களின் அமுலாக்கம் சாதி, மத, மொழி, குலம், பால் நிலை அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையிலான பாகுபாடு எதுவுமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதனை கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவம்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வருவன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், கொள்ளுவதற்கும் வாடகைக்கு எடுப்பதற்கும் நிர்மாணிப்பதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) நிதிகளைத் திரட்டுவதற்கும் காசாகவாயினுஞ்சரி பொருளாகவாயினுஞ்சரி மானியங்களை, அன்பளிப்பு களை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் ;

(இ) செலவாணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் கொடுத்து மாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை தயாரிக்கவும், வரையவும், கையேற்கவும், கழிவு வழங்கவும், புறக் குறிப்பிடவும், கொடுத்து மாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும், ஏதேனும் வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், பேணவும், முடிவுறுத்தவும் ;

(ஈ) இலங்கையிலானுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி எவையேனும் அரசாங்க அல்லது அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுடன் அல்லது வேறு எவரேனும் ஆளுடன் அல்லது நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை, பங்காண்மைகளை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைச் சபை பொருத்தமானதெனத் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமிப்பதற்கும் தொழிலுக்கமர்த்துவதற்கும் வேலை நீக்கம் செய்வதற்கும் அவர்களது சேவைகளை முடிவுறுத்துவதற்கும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பற்கும் கூட்டுத்தாபனத் தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துவதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினரைப் பயிற்றுவிப் பதற்கும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லா விடயங்களையும் செய்வதற்கும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**5**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பதன் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுக்கவும், வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலாலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத் தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக் குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தால்.*

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவமும் நிர்வாகமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான முறையில் தெரிவுசெய்யப் படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும் அத்தகைய எண்ணிக் கையினரான உறுப்பினர்களையும் கொண்ட முகாமைச் சபை யொன்றினால் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் முகாமைச்சபையின் உறுப்பினர்களைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மையொன்றுடனும் பின்வரும் எல்லாக் கருமங்களுக்கும் அல்லது அவற்றுள் எதற்கும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி துறத்தல் அத்துடன் உறுப் பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் ;

(ஆ) முகாமைச் சபையின் பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், அவர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பதவி தாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிக ளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரை நியமித்தலும் அவர்களது தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் நியதி நிபந்தனைகளும் ;

(ஈ) முகாமைச்சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் துணைக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் வெற்றிடங்களை நிரப்புவதிலும் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள் அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல்கள், கூட்ட நடப்பெண் அத்துடன் அவற் றில் அலுவல்களை நிறைவேற்றுதல் ;

(உ) முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினர்களது தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல் லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அன்பளிப்பு, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்ற வகையில் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் செலவினங்களையும் ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைச் சபையால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் ஆண்டு தோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது–

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவுமுள்ள ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்ற தான கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.

**10.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாக உள்ள எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பின் வரையறை.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்குக் காலத்துக்குக் காலம் வருமதியான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்ட தன்மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர எத்தன்மையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது ஆளெவரும் சாட்சியொருவராக கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்